(முற்பகல் 9-10).

திரு. C. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கேரள சர்க்காருடன் ஏற்பட்ட ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக பத்திரிகையில் பார்த்ததாகத் தெரிவித்தார்கள். அப்படி ஒருதலைப் பட்சமாக கைவிடும் ஒப்பந்தம் தான் ஏற்கெனவே போடப்பட்டதா? 28—1—1983 அன்று இந்த அவையில் இப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக அமைச்சரவர்கள் அறிவிக்கவில்லையே. கேரள சர்க்கார் ஒப்பந்தத்தை கைவிட்டது என்றால் அது ஏன் இந்த அவைக்குத் தெரிவிக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நாங்கள் இந்த அவையிலே அறிவித்த ஒப்பந்தம் இன்றும் அமலில் இருக்கிறது. கேரளத்தில் இருந்து பெறுகின்ற மின்சாரத்திற்கு என்ன விலை என்பதுபற்றி முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் நம்மிடமிருந்து சிமிண்ட் பெறுவதற்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற ஒப்பந்தம் ஏற்படவில்லை. அதுபற்றி முடிவு செய்ய வேண்டியது கேரள அரசு தான். அவர்களிடமிருந்து நமக்கு தகவல் வரவில்லை. ஆனால் கேரள முதலமைச்சர் தேவையில்லை என்று தெரிவித்ததாக செய்திகள் வந்தன.

திரு. பி. எஸ். துரைசாமி : தலைவரவர்களே, தற்போது மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதால் நம் விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

கொல்லிமலையிலுள்ள ஆகாச நீர்வீழ்ச்சிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 210—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லி மலையிலுள்ள ஆகாச நீர்வீழ்ச்சியை சுற்றுலா இடமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் திட்டம் தீட்டப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : கொல்லிமலைப் பகுதியை, ஆகாச நீர் வீழ்ச்சி உட்பட, மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆரம்பத்தில் 3 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 10]

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இந்த கொல்லி மலை ஆகாச நீர்வீழ்ச்சிக்கு சுற்றுலாப் பயணிகள் சென்று வர, குளிப்பதற்கு வசதியாக நமது இந்திய நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆண்டபோது கம்பி பாதை அமைக்கப்பட்டிருந்தது. இப்போது அந்தக் கம்பிப் பாதை பழுதடைந்திருப்பதால் அங்கே உல்லாசப் பயணிகள் செல்லுகின்ற நிலைமை இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொல்லிமலைக்கு வருகை தந்தபோது தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலை அமைத்துத் தருவதாகக் கூறினார்கள். அந்தச் சாலை வசதியை ஏற்படுத்தி, உல்லாச பயணிகள் சென்றுவர ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மாவட்ட வளர்ச்சிக் குழுவின் சார்பிலே இந்த கொல்லிமலையை ஒரு சுற்றுலாப் பகுதியாக ஏற்படுத்த மிகப் பெரிய அளவில் பல்வேறு விவரங்கள் அடங்கிய ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் இந்த ஆகாச நீர்வீழ்ச்சிக்கு சென்றுவர பாதை அமைத்து, அங்கே குளிப்பதற்கு போதுமான வசதிகள் ஏற்படுத்தும் திட்டங்களும் அடங்கியிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரை கலந்து, அதற்கான பணிகளை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த ஆகாச நீர்வீழ்ச்சிப் பகுதியை அபிவிருத்தி செய்ய 3 இலட்சம் ரூபாய் முதலிலே செலவிட திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். என்னுடைய தொகுதியில் புளியஞ்சோலையிலிருந்து ஆண்டு தோறும் ஆடி 18 தினத்தன்று இந்த கொல்லிமலை ஆகாச நீர்வீழ்ச்சிக்கு ஏராளமான மக்கள் சென்று வருவார்கள். எனவே புளியஞ்சோலையிலிருந்து அந்த ஆகாச நீர்வீழ்ச்சி வரை வசதியாக சென்றுவரவும் பஸ் போக்குவரத்தை ஏற்படுத்தவும் சாலை வசதிக்கு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த கொல்லிமலைப் பகுதி என்பது திருச்சி மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்ற ஒரு சிறந்த பகுதி, அங்கே பல அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. அதற்கு சுமார் 28 இலட்சம் ரூபாய் செலவிலே பல திட்டங்கள் அரசுக்குத் தரப்பட்டிருக்கின்றன. மேலும் அங்கே மலைவளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 194.80 இலட்சம் ரூபாய் செலவில் சில சாலை அபிவிருத்திப் பணிகளும் வேறுசில திட்டங்களும் அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, அந்தத் திட்டங்கள் எல்லாம்

நிறைவேற்றப்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கருத்தும் செயல்படுகிற நடைமுறையிலே வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு ஒரு ஊருக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? என் தொகுதியில்—பழனி—தமிழ் நாட்டில் மிகப்பெரிய யாத்திரிக தலமாக இருக்கிறது. அதை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலங்கள் என்று அறிவிப்பதற்கு எந்த அடிப்படைத் தகுதிகளை வைத்து அறிவிக்கின்ற திட்டம் எதுவும் அரசிடம் இல்லை, நடைமுறையிலும் இல்லை. மக்களாகவே அதிக அளவில் சென்று அந்த இடத்தைப் பார்க்கிறார்கள் என்றால் அல்லது அதிக அளவில் அந்த இடத்திற்கு போகிறார்கள் என்றால், அந்த விவரங்கள் அரசுக்கு தெரிந்ததற்குப் பிறகு, அந்த இடத்திலே மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே தான் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. பழனியைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால், விவரமாக பரிசீலித்து பதில் தரச் செய்யலாம்.

வடாற்காடு மாவட்டம் அமிர்த்தி என்னுமிடத்திலுள்ள மிருகக் காட்சி சாலை.

*வினா எண் 211—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் அமிர்த்தி என்னும் இடத்தில் மிருகக் காட்சி சாலை இருப்பது உண்மையா?

(ஆ) இதனை வனத்துறை மூலம் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(இ) இப்பகுதியை சுற்றுலா பகுதியாக மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : (அ) ஒரு சிறிய மிருகக்காட்சி சாலை அங்கு உள்ளது.

(ஆ) இது பரிசீலனையில் உள்ளது.

(இ) இந்த இடத்தை ஒரு மாவட்ட உலாத்தலமாக மாற்றுவது வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

VAIMAIYE VELLUM / TRUTH ALONE TRIUMPHS